# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:11 நவம்பர் 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-

VOL: 9 ISSUE NO : 11 November 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-


## நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்

உபாகமம் 28:8



# மரணம் ஜெயமாய் விழுங்கப்பட்டது! கடுமையான வறட்சி ஆசீர்வாத மழையாய் மாறினது!

என் பெயர் சாமுவேல். என் தம்பி அன்பரின் ஊழிய பங்காளர். தம்பி மூலம் அன்பரின் ஊழியத்தையும், **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களையும், குடும்பத்தினரையும் நன்கு அறிவேன்.

## கர்த்தர் புது ஜீவனை தந்தார்!

2016-ம் ஆண்டு சளி பிரச்சனை மாதிரி இருந்ததால் மருத்துவமனைக்கு சென்றேன். என்னை பரிசோதித்த மருத்துவர் உங்கள் இருதயம் 25 சதவீதம் தான் வேலை செய்கிறது. இன்று இரவுக்குள் இருதயம் நின்றுவிடும். காலையில் நீங்கள் உயிரோடு இருக்கமாட்டீர்கள் என சொல்லி விட்டார். உடனே தம்பி அன்பரின் ஊழியத்திற்கு தொடர்புக்கொண்டு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி சொன்னான். **சகோதரர் பாரத்துடன் எனக்காக ஜெபித்தார்கள். காலையில் நான் உயிரோடு இருந்தேன்.**



அதன்பின் 2019-ம் வருடம் ஒரு நாள் சாப்பிடுவதற்கு முன்பு படுக்கலாம் என நினைத்து படுத்தேன். Massive heart attack வந்து இறந்துவிட்டேன். உடனே சகோதரருக்கு தெரிவித்தார்கள். போன் வாயிலாகவே சகோதரர் மிகுந்த வல்லமையோடு ஜெபித்தார். **1கொரி.15:55-57 ஏசாயா 25:8, யோவான் 11:25-ன்படி மரணத்தை ஜெயித்த இயேசுகிறிஸ்து உனக்கும் ஜெயத்தை தருவார் என சொன்னார்கள். அடுத்த வினாடியே ஆண்டவர் இயேசு என்னை உயிரோடு எழுப்பினார், இன்று வரை என்னை ஜீவனோடு பாதுகாத்து வருகிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

## புதிய தொழிலை தந்தார்!

கடந்த 3 வருடங்களாக என் கையில் 10ரூபாய் கூட இல்லை. அந்த அளவிற்கு கஷ்டத்துடன் இருந்தேன். கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தபொழுது சகோதரர் என் தலைமேல் கைவைத்து ஜெபித்து விட்டு, **இனி உனக்கு காசு புரளும்** என சொன்னார்கள். அதன்பின் சாதாரணமாக ஐம்பதாயிரம் ரூபாய் கிடைத்தது. அதை வைத்து பிசினஸ் ஆரம்பித்தேன். தற்பொழுது அது நான்கரை கோடி பிசினஸ்-ஆக விருத்தியடைந்திருக்கிறது.

## சத்துருவின் காரியங்களிலிருந்து விடுதலையாக்கினார்!

என் வாழ்வில் சில சத்துருவின் போராட்டங்கள், செய்வினை காரியங்களும் இருந்தது. அதிலிருந்தும் கர்த்தர் தாமே விடுதலைக்கொடுத்து என் ஆவி, ஆத்துமா, சரீரத்தை பாதுகாத்து வருகிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

## டெங்கு காய்ச்சலை குணமாக்கினார்!

என் தம்பிக்கு சமீபத்தில் டெங்கு காய்ச்சல் வந்து கஷ்டப்பட்டான். அதற்காகவும் சகோதரர் ஜெபித்தார்கள். கர்த்தர் பரிபூரண சுகத்தை தந்தார். எங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கிற சகோதரர் மற்றும் குடும்பத்தினருக்கு எங்கள் நன்றிகளை தெரிவிக்கிறோம்.

**திரு. சாமுவேல், திருச்சி.**



# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ நவம்பர் 2023 ◆ இதழ் 11

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

என் அன்பு பங்காளர்களே, பத்திரிக்கை வாசகர்களே, சீக்கிரம் வரப்போகிற இராஜாதி இராஜாவாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

நம்மைச் சுற்றி எங்கும் யுத்தங்களையும், யுத்தங்களின் சத்தங்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். 2023-ம் வருடத்தின் ஆரம்பத்தில் கர்த்தர் நம்மிடம் கூறினபடியே பிசாசினுடைய ஆக்ரோஷமான ஆதிக்கங்கள் அநேக இடங்களில் கர்ஜிக்கின்றது. அநேக கிறிஸ்தவர்கள் இதை அறியாமல் உலகத்தாரைப் போல இவை விஞ்ஞானத்தால் உண்டாக்கப் பட்டது, இவை மனரீதியான பிரச்சனைகள், உலகத்தை சாராத அந்நிய ஜீவிகள் (aliens) என்றெல்லாம் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். ஏமாந்து போகாதிருங்கள்.

**இந்த நாட்களில் இஸ்ரேல் தேசத்தின் சமாதானத்திற்காக நீங்கள் குடும்பமாகவும், ஆலயங்களிலும், தனி ஜெபத்திலும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.**

ஆபத்துகள் மட்டுமல்ல, பிசாசு தனக்கு கொஞ்சகாலம் தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கோடிக்கணக்கான ஜனங்களை வஞ்சித்துக்கொண்டிருக்கிறான். லூக்கா 21:19-36 வரை நாம் படிக்கிறதுபோல கடைசி காலங்களுக்கு ஆயத்தப்படுவோம். நம்முடைய மீட்பு சமீபமாய் இருக்கிறபடியால் விழித்திருந்து ஜெபியுங்கள். அநேகரை ஆயத்தப்படுத்துவோம். ஆத்தும ஆதாயத்தை துரிதமாய் செய்வோம்.

**உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழியத்தின் பிரதான பணி சுவிசேஷத்தை அறிவிப்பதே! தேவன் தாமே அற்புத அடையாளங்களின் மூலம் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்து கிறார். இந்த பிரதான நோக்கத்தை நாம் நிறைவேற்றுவதற்கு அதிகமான**

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்
இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/-. ஆயுள் சந்தா ரூ.2,000/-.
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1,500/-. ஆயுள் சந்தா ரூ.15,000/-.

24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205
e-mail: info@mojindia.org website: www.ministryofjesus.in
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

**பொருளாதார வசதிகள் தேவைப்படுகிறது. இந்த தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள்.**

அக்டோபர் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். நவம்பர் மாதம் ஜாஹிராபாத், நாகர்கோவில், திருச்சியில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

உங்கள் பகுதியில் நடைபெறுகிற கூட்டங்களுக்கு மனஉற்சாகமாய் தாங்குங்கள். இந்த கூட்டத்தின் மூலம் இரட்சிக்கப்படுகிற ஆத்துமாக்களை தேவன் உங்கள் கணக்கில் எழுதுவார்.

**கிறிஸ்துமஸ்-ஐ முன்னிட்டு S.J.Saves Trust-ல் உள்ள ஏழைப்பிள்ளைகளுக்கும், ஏழை முதியவர்களுக்கும் புத்தாடைகளை கொடுக்க வேண்டும். அந்த பணிக்கு நீங்கள் தாராளமாக உதவி செய்யுங்கள்.**

2024-ம் ஆண்டு காலண்டரை பெற விரும்புகிறவர்கள் அதற்கான நன்கொடை Rs.100-ஐ கொடுத்து பெற்றுக்கொள்ளுங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும், எங்கள் அனைவருடைய நல்ல சவுக்கியத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் தினந்தோறும் ஜெபியுங்கள்.

ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொண்டால் ஜெப குறிப்புகளை உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

செல் : **94889 32937**

**இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்**

***லூக்கா 21:28***

***வெளி 2:7***

***நீதி. 24:16 a***

***உபாகமம் 20:4***

கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**





Tamil Whats App No: 95975 55066



# ஆசீர்வாதம் கட்டளையிடுவார்

# Commanded Blessing

தேவ செய்தி : Rev. Dr. A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான சகோதர, சகோதரிகளே, உலகத்தின் மீட்பரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

இந்த மாத தியானத்திற்கு ஆண்டவர் நமக்கு தந்த தேவ செய்தியின் தலைப்பு **ஆசீர்வாதம் கட்டளையிடுவார்!** இதை கட்டளையிடப்பட்ட ஆசீர்வாதம் என்றும்கூட சொல்லாம். **கர்த்தர் உன் களஞ்சியங் களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார். உபாகமம் 28:8**

ஆண்டவராகிய கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிற தேவனாயிருக்கிறார். அவர் ஆசீர்வாதத்தை பொழிந்தருளுவதில் உண்மையுள்ளவராய் இருக்கிறார். **அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும். (சங்.33:9)** ஆம். நம் தேவன் கட்டளையிட்டால் எல்லாம் ஆகும்.

ஒரு முறை இயேசுவின் சீஷர்கள் கடலில் சென்றுக்கொண்டிருந்தப்பொழுது பலத்த சுழல் காற்று உண்டாகி, படவு நிரம்பத் தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதியது. **அப்பொழுது இயேசு எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து, இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. (மாற்கு 4:37)** ஆண்டவர் காற்றையும், கடலையும் பார்த்து இரையாதே, அமைதலாயிரு என கட்டளையிடுகிறார். உடனே அமைதி உண்டாயிற்று. இயற்கையும் அவர் கட்டளைக்கு கட்டுபட்டு இருக்கிறது.

தேவன் கட்டளையிட்டால் மாத்திரமே ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் நிறைவான ஆசீர்வாதம், விசேஷித்த நன்மை, ஒரு பாக்கியம், ஒரு சுபிட்சம் அனைத்தும் முழுமையாக உண்டாகும்.

**உபாகமம் 28-ம் அதிகாரத்தில் 1 முதல் 14 வசனங்களில்** ஆசீர்வாதத்தை குறித்து எழுதப்பட்டுள்ளது. பட்டணத்தில் ஆசீர்வாதம், வெளியில் ஆசீர்வாதம், கர்ப்பத்தின் கனி, நிலத்தின் கனியில் ஆசீர்வாதம் என பலவிதமான ஆசீர் வாதங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தியானத்தில் **ஆசீர்வாதம் கட்டளையிடுவார்** என்பதைக் குறித்து நாம் விரிவாக பார்ப்போம்.

**லேவி.25:21-ல்** உங்களுக்கு ஆசீர் வாதத்தை அநுக்கிரகம் பண்ணுவேன் என்று எழுதப்பட்டுள்ளது. ஆசீர்வாதத்தை கட்டளை யிடுவதும், ஆசீர்வாதத்தை அநுக்கிரகம் பண்ணுவதும் அவருடைய விருப்பமே! **இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். எண்.24:1.** நம் தேவாதி தேவன், இராஜா இராஜா, கர்த்தாதி கர்த்தர் தம் ஜனங்களை ஆசீர்வதிக்க அதிக பிரியமுள்ளவராயிருக்கிறார். அந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தம் உள்ளவர்களாக தகுதியுள்ளவர் களாக இருக்கிறோமா என பார்க்க வேண்டும்.

**கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். சங்.115:13.** ஆம் கர்த்தர் பாரபட்சமின்றி அனைவரையும் ஆசீர்வதிப்பார். விசேஷமாய் அவருக்கு பயப்படுகிற மக்களையும் ஆசீர் வதிப்பார். ஏனென்றால் அவரே அல்பாவும், ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிற கர்த்தர் என்றென்றும் வாக்கு மாறாதவர். **கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். எண்.6:24-26** மேற் கூறப்பட்ட இந்த ஆசீர்வாத வார்த்தைகளை தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக தேவ மனிதனாகிய மோசேயிடம் கூறினதாகும். இன்றைக்கும் இந்த ஆசீர்வாத வார்த்தைகளைத்தான் திருச்சபை ஆராதனைகளின் இறுதியில் போதகர்கள் பயன்படுத்துகிறார்கள்.

**உபாகமம் 28:8-ன்படி** மூன்று விதமான ஆசீர்வாதங்களை ஆண்டவர் கட்டளையிடுகிறார். அவற்றைக்குறித்து தொடர்ந்து பார்ப்போம்.

## 1. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்

## (The Lord will bless you)

**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித் தார்.**

**பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவை களையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங் கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். ஆதி.1:27-28**

நாம் அனைவரும் தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் முதலாவது நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார். **உங்கள் ஒவ்வொருவரையும் பேர் பேராக அழைத்து ஆசீர்வதிக்கவே தேவன் விரும்புகிறார்.** ஆகவே சோர்ந்து போகாதீர்கள். நீங்கள் அவருடைய சாயலைக் கொண்டிருப்பதால் உங்களையும், உங்கள் சந்ததிகளையும், உங்களுக்குரியவைகளையும் ஆசீர்வதிப்பார். இதற்கு உதாரணமாக ஆபிரகாமை எடுத்துக் கொள்ளுங்கள். **நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன்**

**பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். ஆதி.12:2ன்படி** ஆண்டவர் ஆபிரகாமுக்கு ஆசீர்வாதத்தை கட்டளையிடுகிறார். இது தனிப்பட்ட ஒரு மனிதருக்குரிய ஆசீர்வாதம். இந்த ஆசீர்வாதத்தை தேவன் உங்களுக்கும் கொடுத்து உங்களை சந்தோஷப்படுத்த உண்மையுள்ளவராயிருக்கிறார்.

ஆபிரகாம் மூலமாக யூத இனம் தோன்றியது. ஒரு இஸ்ரவேல் நாடே அந்த ஆபிரகாமின் சந்ததியாக இன்று இருக்கிறது. இதுதான் தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு ஆண்டவர் கொடுத்த ஆசீர்வாதம். அந்த ஆசீர்வாதத்தை ஆபிரகாம் சுதந்தரித்துக் கொண்டான். **உன்னை பெருமைப்படுத்து வேன், உன்னை கனப்படுத்துவேன் என்ற ஆசீர்வாதம் ஆபிரகாமை ஒரு பெரிய மனிதனாக மாற்றியது. இவ்வாறு உங்களையும் ஆசீர்வதிக்க ஆண்டவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.**

நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என ஆபிரகாமைப் பார்த்து தேவன் சொன்ன பொழுது, ஆபிரகாம் அதை விசுவாசித்தான். ஆகவே தேவன் அவன் மனதில் எண்ணி முடியாத அளவிற்கே அவனை ஆசீர்வதித்து ஒரு தேசமாகவே உயர்த்தியிருக்கிறார். இன்று வரை அது வரலாற்று உண்மையாக இருக்கிறது.

**இன்றைக்கு உங்களுடைய ஆரம்ப காலத்தையும், இப்பொழுது உள்ள காலத்தையும் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் எவ்வளவாக தேவன் உங்களை ஆசீர்வதித்து உயர்த்தியிருக்கிறார் என்பதை உணரமுடியும்.** கர்த்தர் ஆசீர்வாதத்தை கட்டளையிடும்பொழுது அதை யாராலும் தடுக்க முடியாது. ஆண்டவர் தரும் ஆசீர்வாதம் பூரணமாக இருக்கும், எப்பொழுதும் நிறைவானதாக இருக்கும்.

## உ. கர்த்தர் உன் களஞ்சியங்களையும் ஆசீர்வதிப்பார்.

## (The Lord will bless your storehouses)

நம் ஊர்களில் பேச்சு வழக்கில் தானிய கிடங்கு அல்லது பண்டகசாலை (store house) என சொல்வோம். இந்த பண்டக சாலைகள்தான் களஞ்சியங்கள் என சொல்லப்படுகிறது. அந்த பண்டகசாலையில் எற்கனவே பல வகையான தானியங்கள், உணவு பொருட்கள் மற்றும் ஏராளமான பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும். அவைகளிலும் கர்த்தர் ஆசீர்வாதம் கட்டளை யிடுவேன் என்கிறார். **உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர் வதிக்கப்பட்டிருக்கும். உபா.28:5.** இவை யெல்லாம் ஏற்கனவே உங்கள் வாழ்க்கையில் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு களஞ்சிய மாக இருக்கலாம். இந்த ஆசீர்வாதங்கள் உங்கள் முற்பிதாக்கள் மூலமாக வந்த சுதந்திரமாக அல்லது பெற்றோர்கள் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதமாக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் செல்வந்தராக இருந்து, பொருளாதாரத்தில் ஆசீர்வதிக்கப்பட்டு உங்கள் களஞ்சியங்களில் ஏற்கனவே அவை நிறைந்து காணப்படலாம். அவைகளையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.

யோபுவின் புத்தகத்தில் யோபுவை குறித்து எழுதும்பொழுது, அவன் வாழ்வில் ஏற்கனவே அவனுக்கு திரளான வேலை யாட்கள், ஆயிரமாயிரமான மிருக ஜீவன்கள் இருந்தது என படிக்கிறோம். இதுதான் அவனுடைய பண்டக சாலை இன்றைக்கு ஏராளமானபேர் தங்கள் முற்பிதாக்களின் ஆசீர்வாதத்தை தொலைத்து விடுகிறார்கள். அடுத்த சந்ததி வரும்பொழுது அந்த களஞ்சியங்களை கண்ணில் பார்க்க முடியாதபடி, அவைகள் நிலைக்காமல் அங்குமிங்கும் சிதறி போய்விடுகிறது, ஒன்றுமில்லாமல் அழிந்து போய் விடுகிறது.

**கர்த்தர் உங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதம் ஒரு வீடாக இருக்கலாம், விவசாய நிலமாக இருக்கலாம். Fixed Deposit ஆக இருக்கலாம். அல்லது சமுதாயத்தில் நீங்கள் சம்பாதித்த நல்ல பேர், அந்தஸ்து, நற்குணங்களாக இருக்கலாம். அவைகள் எல்லாமே களஞ்சியங்களே! அந்த களஞ்சியங்கள் நம்மை விட்டு போய்விடக்கூடாது. நம் முற்பிதாக்கள் நமக்கு வைத்திருக்கிற சுதந்திர பாகத்தை நாம் வீணாக்கிவிடவும் கூடாது. வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்திரம், .... நீதி.19:14.**

எனவே உங்கள் களஞ்சியங்களிலும் ஆண்டவர் ஆசீர்வாதங்களை கட்டளை யிடுவேன் என சொல்கிறார். கட்டளையிடும் ஆசீர்வாதம் உங்களுடைய வாழ்க்கையில் அபரிமிதமாக இருக்க வேண்டும்.

உங்கள் களஞ்சியங்கள் ஆசீர்வாத மாக இருக்க நீங்கள்என்ன செய்ய வேண்டும் என்பதையும் வேதம் தெளிவாக கூறுகிறது. **உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும், உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். நீதி.3:9-10** இங்கு அரைகுறையாக அல்ல, பூரணமாய் நிரம்பும் என்பதே தேவனுடைய கட்டளையாக இருக்கிறது. **உங்கள் பண்டக சாலை ஆசீர்வாதமாய இருக்க வேண்டு மேயானால், உங்கள் களஞ்சியங்கள் எப்பொழுதும் நிறைந்து காணப்பட வேண்டுமானால் உங்கள் பொருளாலும் உங்கள் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரை கனம் பண்ணுங்கள்.** உங்களுடைய உயர்விலும், தாழ்விலும், வறுமையிலும், வளமையிலும் நீங்கள் கர்த்தரை கனம்பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும். உங்கள் களஞ்சியங்கள் ஆசீர் வதிக்கப்பட நீங்கள் தேவனை கனம் பண்ணியே ஆக வேண்டும். **உங்களுடைய உழைப்பால், உங்களுடைய பொருளால், உங்களுடைய நேரத்தால், கர்த்தர் உங்களுக்கு கொடுத்திருக்கிற தாலந்து களால் அவரை நீங்கள் கனம் பண்ண வேண்டும். என்னைக் கனம்பண்ணுகிறவர் களை நான் கனம் பண்ணுவேன். 1சாமு.2:30**

யோசேப்பு என்னும் ஒரு இளைஞன் சாதாரண அடிமையாக எகிப்திற்கு சென்றான். தான் செய்யாத தவறுக்காக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். சொப்பனத்திற்கான அர்த்தத்தை அறியக்கூடிய ஞானத்தை கர்த்தர் அவனுக்கு கொடுத்ததினால் யோசேப்பு பார்வோனுடைய சொப்பனத்திற் கான அர்த்தத்தை சொன்ன மாத்திரத்தில் இவன்தான் சரியான ஆள் என பாரவோன் உணர்ந்து யோசேப்பை எகிப்தின் அதிபதியாக மாற்றினான். எகிப்தில் பரிபூரணமுள்ள ஏழு

வருஷங்களிலும் பூமி மிகுதியான பலனைக் கொடுத்தது. அவ்வேழு வருஷங்களில் எகிப்து தேசத்தில் விளைந்த தானியங்களையெல்லாம் அவன் சேர்த்து, அந்தத் தானியங்களைப் பட்டணங்களில் கட்டிவைத்தான். அந்தந்தப் பட்டணத்தில் அதினதின் சுற்றுப்புறத்தில் விளைந்த தானியங்களைக் கட்டிவைத்தான். இப்படியாக யோசேப்பு கடற்கரை மணலைப் போல மிகுதியாகத் தானியத்தைச் சேர்த்து வைத்தான். அது அளவுக்கு அடங்காத தாயிருந்தது.

ஆம், யோசேப்பு இவ்வாறு ஞானமாய் செயல்பட்டு விளைச்சல் இருக்கும்பொழுதே தானியங்களை களஞ்சியத்தில் சேர்த்து வைத்து விட்டான். அதன் பின் எகிப்து மற்றும் சகல தேசங்களிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் எகிப்து தேசத்தில் மட்டும் ஆகாரம் இருந்தது. அதற்கு காரணம் யோசேப்பு. ஏனென்றால் யோசேப்பு ஒரு களஞ்சியமாகவே மாறிவிட்டான். **சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்த படியால், சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானியம்கொள்ளும் படி எகிப்துக்கு வந்தார்கள். ஆதி.41:57.**

**உங்கள் களஞ்சியங்கள் ஆசீர் வதிக்கப்பட ஞானமாய் செயல்படுங்கள். கர்த்தரை கனம் பண்ணுங்கள்.** ஒரு பத்தாயிரம் ரூபாய் இருந்தால் அந்த பத்தாயிரத்தையும் செலவழித்து விடாதீர்கள். உங்கள் களஞ்சியத்தில் கொஞ்சம் எடுத்து சேர்த்து வையுங்கள். ஒரு இலட்சம் இருந்தால் அந்த ஒரு இலட்சத்தையும் செலவழிக்கலாம். செலவழிக்க ஆயிரம் வழிகள் உண்டு. ஆனால் அதை எதற்காக, எப்படி செலவழிக்கி றோம் என்பது தான் முக்கியம். வீணான, தேவையில்லாத செலவு கூடாது. நல்ல விளைச்சல் இருந்தப்பொழுதே யோசேப்பு களஞ்சியத்தில் சேர்த்து வைத்து விட்டான். எறும்பினிடத்தில் கூட கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் உண்டு. கோடை காலத்தி லேயே தனக்குரிய ஆகாரத்தை சம்பாதித்து தானியத்தை சேர்த்து வைத்துக்கொள்கிறது. **நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக் கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடை காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும். நீதி.6:6-8** யோசேப்பு 7 வருஷம் தானியங் களை களஞ்சியத்தில் சேர்த்து வைத்தபடியால் அடுத்து வந்த 7 ஆண்டுகள் ஆகாரம் தடையில்லாமல் கிடைத்தது. அதைப்போல ஆண்டவர் கொடுக்கிற ஆசீர்வாதத்தை காத்துக்கொள்ள வேண்டும். நீங்களும் ஞானமாய் செயல்பட வேண்டும். ஒருவேளை யோசேப்பு இந்த நல்ல முயற்சியை எடுக்கவில்லையென்றால் 7 வருட பஞ்சத்தை தாக்குபிடிக்க முடியால் சகல தேசத்தாரும் பசியாலும், பட்டினியாலும் ஆகாரம் இல்லாமல் மாண்டு போயிருக்கலாம்.

உங்கள் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பி வழிய வேண்டுமானால், திராட்சை ரசம் புரண்டோட வேண்டுமானால் உங்கள் களஞ் சியத்தை கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டும். எனவே கர்த்தரை கனம் பண்ணுங்கள். ஞானமாய் நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது அவர் ஆசீர்வாதத்தை கட்டளையிடுவார்.

## 3. கர்த்தர் நீ கையிடும் எல்லா வேலைகளையும் ஆசீர்வதிப்பார்

## (The Lord will bless all the work of your hands)

**என் சாமார்த்தியமும் என் கைப் பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து,**

**உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக, அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறது போல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிற தற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர். உபா.8:17-18**

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, சம்பாதிக்கிறதற்கான பெலனை ஒவ்வொரு நாளும் ஆண்டவர் உங்களுக்கு தருவதால் நீங்கள் கையிட்டுச் செய்யும் வேலைகளை எல்லாம் ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார். நீங்கள் எந்த வேலை வேண்டுமானாலும் செய்யலாம். கர்த்தர் எல்லா வேலைகளிலும் ஆசீர்வாதம் கட்டளையிடுகிறார். **உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார். உபா.15:10**

எதை செய்கிறோமோ அதை உண்மையாக செய்ய வேண்டும் என வேதம் சொல்கிறது. உண்மையுள்ள மனுஷன்தான் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறமுடியும். **(நீதி.28:20)** நீங்கள் தனியார் துறையிலோ, அரசு நிறுவனங்களிலோ அல்லது சொந்தமாக ஒரு தொழில் செய்தாலும் அதை உண்மையும் உத்தமுமாய் செய்யும்பொழுது, கர்த்தர் நிச்சயமாக ஆசீர்வாதத்தை கட்டளையிடுவார்.

நீங்கள் எந்த தவறான வழிகளிலும் சம்பாதிக்க கூடாது. துவக்கத்தில் அது உயர்வை தருவதாக இருந்தாலும் முடிவில் அது வேதனையை கொண்டு வரும். கர்த்தருடைய ஆசீர்வாதம் மட்டுமே ஐசுவரியத்தை தரமுடியும்.

எந்த வேலைக்கு போனாலும் தினந்தோறும் காலையில் ஜெபித்துவிட்டு செல்லுங்கள். கர்த்தாவே, என் கைகளின் கிரியை ஆசீர்வதியும் என கேளுங்கள். ஆண்டவர் அந்த வேலையில் ஆசீர்வாதத்தை கட்டளையிடுவார். **சங்கீதம் 128:2-ல்** உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், அது உனக்கு பாக்கியமும் நன்மையுமாக இருக்கும் என சொல்லப்பட்டிருக்கிறது. உங்கள் கையால் நீங்கள் கஷ்டப்பட்டு பிரயாசப்படும்பொழுது அதை சாப்பிடும்படியாக செய்வார். அவருடைய ஜனத்திற்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இந்த ஆசீர்வாதத்தை கட்டளையிடுகிறார். இந்த ஆசீர்வாதத்தை நீங்கள் சுதந்தரிக்க வேண்டுமானால் கர்த்தர் முன்பாக உங்களை தாழ்த்த வேண்டும். இன்றைக்கு ஏராளமான பேர் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் மதுபான கடைகளுக்கும், போதை பொருளுக்கும், உல்லாச விடுதிகளுக்கும், வட்டி கடனுக்கும், மருத்துவ செலவிற்கும், கோர்ட் செலவிற்கும் போகிறது. அவர்களால் சம்பாதித்தவைகளைக்கொண்டு சாப்பிட முடியவில்லை.

**உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார். உபாகமம் 28:8.** கர்த்தர்

உங்களுக்கு கொடுக்கும் தேசத்தில் உங்களை ஆசீர்வதிப்பார். நீங்கள் எந்த இடத்தில் வாழ்கிறீர்களோ, எங்கு குடியிருக்கிறீர்களோ அந்த இடத்தில் உங்களை ஆசீர்வதிப்பார். ஆகவே எதற்கும் கலங்காதீர்கள். இன்றைக்கு இஸ்ரவேல் தேசம் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு தேசமாக இருக்கிறது. எகிப்தில் உள்ள பாலைவனம் எல்லாம் பாலைவனமாகவே இருக்கிறது. இஸ்ரவேலில் உள்ள பாலைவனம் எல்லாம் விவசாய நிலங்களாக, நல்ல செழிப்பானவைகளாக இருக்கிறது. காரணம் கர்த்தர் தாம் கொடுத்த தம் வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவராக இருக்கிறார். **உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார். உபா.15:5**

எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே, மூன்று குறிப்புகளை இந்த தியானத்தின் வாயிலாக உங்களோடு பகிர்ந்து கொண்டேன். **முதலாவது கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கிறார். ஆசீர்வதிப்பேன் என சொன்னவர் உங்களை அவ்வாறே ஆசீர்வதிப்பார். ஆபிரகாமை போல ஆசீர்வதிக்கப் போகிறார். அதை சுதந்தரித்து கொள்ளுங்கள்.**

**இரண்டாவது உங்கள் பண்டகசாலையை, உங்கள் களஞ்சியங்களை இன்னும் அதிகமாய் ஆசீர்வதிப்பார்.** உங்கள் முற்பிதாக்கள் சம்பாதித்தவைகள் அல்லது ஆரம்ப காலத்தில் நீங்கள் சவதரித்தவைகள் ஏராளமாய் இருக்கலாம் அவற்றையும் ஆண்டவர் ஆசீர்வதித்து கொடுப்பார். யோபு உத்தமனும் சன்மார்க்கனுமாய் வாழ்ந்தான். அதனால் அவனுடைய களஞ்சியம் ஆசீர்வதிக்கப்பட்டது. கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் கர்த்தரை கனம் பண்ணவேண்டும். அதுமட்டுமல்லாது யோசேப்பைப்போல ஞானமாய் செயல்பட வேண்டும். அப்பொழுது உங்கள் களஞ்சியங்கள் ஆசீர்வதிக்கப்படும்.

**மூன்றாவது நீங்கள் கையிட்டு செய்யும் எல்லா வேலைகளிலும் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்.** நீங்கள் எந்த பணியை செய்தாலும் அதை உண்மையாய் செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் வேலைக்கு செல்லும்போது ஜெபித்து செல்லுங்கள். தினந்தோறும் தேவ சமூகத்தில் வந்து ஆண்டவரே, என்னுடைய பெலன், என்னுடைய திறமை, என்னுடைய சாமர்த்தியம் எதுவும் இல்லை. எல்லாம் உங்கள் கிருபை தான் என முற்றிலும் உங்களை தாழ்த்துங்கள். உங்களை தாழ்த்தி ஆண்டவரிடத்தில் கேட்கும்பொழுது, நிச்சயமாகவே நீங்கள் கையிட்டு செய்யும் எல்லா வேலைகளிலும் கர்த்தர் ஆசீர்வாதம் கட்டளையிடுவார். அவர் எதிர்பார்க்கிற காரியத்தை நீங்கள் செய்தால்தான் பூரணமான ஆசீர்வாதம் உங்கள் கைகளில் வந்து கிடைக்கும். **நம் தேவன் ஆசீர்வாதத்தை கட்டளையிடும் பொழுது அதில் ஒரு நிறைவு, ஒரு பரிபூரணம் உண்டாகும்.**

தேவாதி தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, தம்முடைய கிருபையால் உங்களை நிறைவாய் நிரப்புவாராக!

Telugu Whats App No: 91770 87860

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்



| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.


Trichy
WE ARE
HIRING
Accountant
(B.com. / M.com. Graduates)
Skills Required : Tally ERP 9
Data Entry Operators
(Any UG/PG Candidates)
Skills Required : Good in computing skills
Correspondence
(Any UG/PG Candidates)
Skills Required : Typing & computing skills
(Tamil, English, Telugu)
Social Media Executive
(Any UG/PG Candidates)
Skills Required : Good in social media
platforms , Good in English & Tamil
Video Editors
(Any UG/PG Candidates)
Skills Required : Able to work in
Adobe Premiere Pro & After Effects
Graphic Designers
(Any UG/PG Candidates)
Skills Required : Able to work in
Adobe Photoshop & Illustrator
Cameraman
with adequate experience
Drivers
Cooks
House Keepers
Male / Female
Christians Preferred
Accommodation will be provided
Apt Remuneration will be paid
Apply to :
info@mojindia.org

# சுவிசேஷ பணி

நிச்சயமற்ற நம் வாழ்க்கையில் இயேசுவின் மீது நாம் வைத்திருக்கிற விசுவாசம் ஒன்றே நமக்கு நம்பிக்கையையும் ஆதாரத்தையும் கொடுக்கிறது. இயேசுவை பற்றும் இந்த விசுவாசம் நமக்கு எப்படி கிடைக்கும்? இயேசுகிறிஸ்துவை அறியும்பொழுது மட்டுமே! இயேசுவை எப்படி அறிவது? யாராவது ஒருவர் சுவிசேஷத்தை அறிவிக்கும்பொழுதுதான்!

**அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ரோமர் 10:15 யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும் என்றேன். ஏசாயா 6:8**

மேற்கூறப்பட்ட வசனத்தில் தேவன் ஏசாயாவிடம் கேட்டதுபோல தேவன் நம்மைப்பார்த்து இன்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.


கோயம்புத்தூர் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினர்

தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. மத்தேயு 11:5 என்று இயேசு கூறினார். இந்த வார்த்தைகளே நம் அன்பரின் ஊழியத்தின் பிரதான நோக்கமும் பணியும் ஆகும். இங்கு தரித்திரர் என்று சொல்லும்பொழுது உலகப்பிரகாரமான வாழ்க்கையில் தரித்திரராக இருப்பவர்கள் மட்டும் அல்ல! மாறாக ஆவிக்குரிய வாழ்விலும் தரித்திரராகவே இருக்கின்றவர்களையும் குறிக்கிறது.

## அன்பரின் ஊழியத்தின் மூலம் நடத்தப்படும் சுவிசேஷ பணியின் சிறப்பம்சங்கள்

**1.சொல்லப்படாத இடங்களில் சுவிசேஷம் அறிவித்தல்**

**நம்முடைய ஊழியத்தின் மூலம் இந்திய தேசமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத அநேக இடங்களில் முதன்முறையாக கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. சிதம்பரம், காஞ்சிபுரம், அரக்கோணம், கோலாகட், கோராபுட், போன்ற இடங்களில் பெரிய நற்செய்தி கூட்டங்கள் முதன்முறையாக அன்பரின் ஊழியம் மூலமாகவே நடத்தப்பட்டது.**

**2. மக்கள் விடுதலை பெறுகின்றனர். இரட்சிப்பு ஏற்படுகின்றது.**

**இக்கூட்டங்களில் சுவிசேஷத்தை கேட்கும் மக்கள் மாபெரும் அற்புத அடையாளங்களை பெறுகின்றனர். புற்றுநோய், வாதம், பல்வேறு வலி, வேதனைகள், ஆட்டிசம், இருதய பெலவீனங்கள், தீராத வியாதிகள் அனைத்தும் இயேசுவின் நாமத்தில் சுகமாகின்றன. குடும்பங்கள் இணைகின்றன. பாவத்திலிருந்து மீட்பு உண்டாகிறது. இதன்மூலம் குடும்பங்களாக கிராமங்களாக இரட்சிக்கப் படுகின்றனர். திருச்சபைகள் கட்டப்படுகின்றன. எண்ணற்ற சாட்சிகளை நாம் இதற்கு சொல்ல முடியும். இவை இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார் என்பதை நிரூபிக்கின்றன.**

### 3. ஊழியர்கள், போதகர்கள் உருவாகின்றனர்

இக்கூட்டங்களில் தொடப்படும் மக்களில் பலர், இயேசுவின் அன்பை ருசிபார்த்து, தங்கள் இடங்களில் ஊழியர்களாக, போதகர்களாக மாறுகின்றனர். இதன் மூலம் நாம் விதைத்த சுவிசேஷ விதை, ஓர் ஆலமரமாக உருவெடுத்து லட்சக்கணக்கான ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த உதவியாகின்றது.

### 4. தனி ஜெபம்/ஆலோசனையின் தாக்கம்

நம் கூட்டங்களின் முடிவில் வந்திருந்த ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியே ஜெபித்து ஆலோசனை வழங்குகிறோம். இதன் மூலமாக தற்கொலைக்கு நேராக ஓடும் அநேக உள்ளங்கள், உடைந்த, சோர்வுற்ற இதயங்கள் ஆறுதல் அடைகின்றன. பிரிந்த குடும்பங்கள் இணைகின்றன. கர்த்தருக்கு சாட்சியாக வாழ்கின்றனர்.





வாரங்கல் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினர்

## இந்த மாபெரும் ஊழியத்தில் உங்கள் பங்கு!

### இத்தகைய ஆத்தும ஆதாய சுவிசேஷ பணியில் நீங்கள் எப்படி பங்கு பெறலாம்?

- ☑ ஒரு சுவிசேஷ கூட்டத்தை, குடும்ப ஆசீர்வாத கூட்டத்தை நடத்துவதற்கு நீங்கள் ஸ்பான்சர் செய்யலாம்.
- ☑ உங்கள் பகுதியில் நம் கூட்டத்தை ஒழுங்கு செய்யலாம்.
- ☑ கூட்டத்திற்கு ஆகும் செலவுகளில் ஒரு பகுதியை நீங்கள் தாங்குவதற்கு முன்வரலாம்.
- ☑ கூட்டத்திற்கான விளம்பரம் மற்றும் சுவரொட்டிகள், பேனர் வைப்பதற்கு அந்தந்த ஊர்களில் உள்ளவர்கள் இயன்றவரை உதவிகளை செய்யலாம்.

ஆம் பிரியமானவர்களே, சுவிசேஷ பணியை நீங்கள் தாங்கும்போது, அதற்குரிய பலனை நீங்கள் பல நூறு மடங்காக இம்மையிலும் மறுமையிலும் பெறுவீர்கள்.

நாம் சேர்ந்து தேவனுடைய இராஜ்யத்தை கட்டி எழுப்புவோம்! ஆத்துமாக்களை சேகரிப்போம்! பரலோகத்தை நிரப்புவோம்!

### வங்கி விபரம்

**MINISTRY OF JESUS**
**A/c No. 10848474869**
**State Bank of India**
**Cantonment**
**Trichy Main Branch**
**IFS code: SBIN 0000930**

**Google Pay, Paytm, PhonePe, etc..** மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்கிற்கு காணிக்கை அனுப்பலாம். பண பரிமாற்ற செயல்கள் வாயிலாக காணிக்கை அனுப்ப விரும்புகிறவர்கள் மேலும் விபரங்கள் அறிய இந்த பத்திரிக்கையின் 12-ம் பக்கத்தில் பார்த்து அதற்குரிய விபரங்களை அறிந்துக் கொள்ளலாம்.



# துதி அறிக்கை
# குடும்ப ஆசீர்வாத கூட்டங்கள் வாயிலாக நடைபெற்ற அற்புதங்கள்

## இருதய பெலவீனம் மாறியது! இப்போது விளையாட்டு வீரன்!



என் அண்ணனின் பேரன் பிறந்து 3 மாத குழந்தையாக இருந்தப் பொழுது அவனுக்கு இருதயம் வீங்கியிருந்தது. சிகிச்சை மூலம் இதை சரி செய்வது கஷ்டம் என மருத்துவர்கள் கூறிவிட்டனர். அந்த நேரத்தில் கோயம்புத்தூர் **Grace Chruch**-ல் நடைபெற்ற ஒரு கூட்டத்திற்கு Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் வந்திருந்தார்கள். உடனே நாங்கள் அனைவரும் குழந்தையை தூக்கிக்கொண்டு கூட்டத்திற்கு வந்தோம்.

**கூட்டம் முடிந்து சகோதரரை நேரில் பார்த்து ஜெபிக்கும்படி சொன்னோம். சகோதரர் குழந்தைக்காக மிகுந்த உருக்கமாய் ஜெபித்து அனுப்பினார்கள். இப்பொழுது அவனுக்கு 10 வயது ஆகிறது. இதுவரை அவன் நல்ல சுகத்துடன் இருக்கிறான். டென்னிஸ் விளையாட்டில் இதுவரை 9 மெடல் வாங்கியிருக்கிறான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. யேசு மேரி, புலியங்குளம்.**

## குழந்தை பாக்கியம் கிடைத்தது!



எனக்கு திருமணமாகி 7 முறை கர்ப்பபையில் குழந்தை உருவாகி சில மாதங்களில் இறந்துவிடும். (MISCARRIAGE) மருத்துவர்கள் என்னை பரிசோதித்துவிட்டு காரணம் சொல்ல முடிய வில்லை எல்லாம் நார்மல் என்றார்கள். 2012-ல் கொத்தக் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்து, கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டிருந்தேன். **ஜெப நேரத்தில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்தார்கள், 7 முறை MISCARRIAGE ஆகி வந்திருக்கிற ஒரு சகோதரிக்கு கர்த்தர் இரங்கி இரண்டு ஆண் பிள்ளைகளை தருவார் என தீர்க்க தரிசனமாக சொன்னார்கள்.** என்னைப் பற்றியா சகோதரர் சொல்கிறார் என்ற கேள்வியோடு அமர்ந்திருந்தேன். அந்த நேரத்தில் நான் அணிந்திருந்த புடவையின் நிறத்தை தீர்க்கதரிசனமாக சகோதரர் சொன்னபொழுது தான் எனக்கு நம்பிக்கை வந்தது.

**கர்த்தர் என் கண்ணீரைக் கண்டு சகோதரர் மூலமாக சொன்ன தீர்க்க தரிசனத்தின்படி எனக்கு 2 ஆண் பிள்ளைகளை தந்தார்.** மூத்த மகனின் பெயர் ஜான் வெஸ்லி 2-வது மகனின் பெயர் பெனிஹின். இப்பொழுது வாரங்கல் கூட்டத்திற்கு குடும்பமாக வந்திருந்து கர்த்தருக்கு மகிமை செலுத்துகிறோம். சகோதரர் அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

**- திருமதி. ஜோஷ்னா, வாரங்கல்.**

# கடித ஊழியத்தின் வாயிலாக தேவன் செய்த அற்புதங்கள்!




## தடை நீங்கியது! டிரான்ஸ்பர் கிடைத்தது!



எங்களுடைய இடத்தை விற்பதில் வருட கணக்கில் போராட்டங்கள் இருந்து வந்தது. குடும்பத்திலும் கடன் பாரம் அதிகமானது. அதற்காக இடத்தை விற்க அதிக முயற்சிகள் செய்தோம். ஆனால் முடியவில்லை. **உடனே அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதி இந்த போராட்டம் நீங்க ஜெபிக்கும்படி சொன்னேன். ஊழியத்திலிருந்து பதில் கடிதம் வந்தது. அதன்பின் தடை நீங்கி, ஒரு சில நாட்களில் இடத்தை நல்ல விலைக்கு விற்க கர்த்தர் உதவி செய்தார். எங்களுடைய கடன்கள் அனைத்தையும் அடைத்து விட்டோம்.**

என் மகள் வேலையின் நிமித்தம் தினந்தோறும் 120 கி.மீ பயணம் செய்ய வேண்டியிருந்தது. அதற்காகவும் ஜெபிக்கும்படி கடிதம் வாயிலாக கூறியிருந்தேன். கர்த்தர் அந்த காரியத்திலும் இரங்கினார். **மகளுக்கு மிக அருகாமையிலேயே டிரான்ஸ்பர் கிடைத்து வேலை செய்ய கர்த்தர் உதவி செய்தார். கர்த்தரை துதிக்கிறேன்.**

**- திருமதி. விமலேஷ் குமாரி, கோயம்புத்தூர்.**

## கண்ணிலிருந்த பெலவீனம் மாறியது!



எனக்கு 5 வருடமாக இடது கண் துடித்துக்கொண்டிருந்தது. அதற்காக மருத்துவமனைக்கு சென்றேன். என்னை பரிசோதித்த மருத்துவர்கள் உடனே MRI scan செய்து பார்த்தனர். அப்பொழுது நரம்பில் பாதிப்பு இருப்பது தெரிந்தது. உடனே ஆன்ஜியோ பண்ணினார்கள். அதில் 3.5 கிராம் அளவிற்கு கட்டி இருக்கிறது. எனக்கு 76 வயது என்பதால் ஆப்ரேஷன் செய்வதும் கடினம் என சொல்லி விட்டார்கள்.

உடனே நான் அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதினேன். **உன் கருவை என் கண்கள் கண்டது என்ற வசனத்துடன் எனக்கு பதில் கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதன்பின் மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்தபொழுது மருத்துவரே ஆச்சரியப்பட்டு என்ன செய்தீர்கள். அப்படியே சுருங்கியிருக்கிறது என கேட்டார்கள். தற்பொழுது பரிபூரண சுகத்துடன் இருக்கிறேன். அதிசயம் செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- திருமதி. கமலம், காந்தி மாநகர்.**

# வாட்ஸ் அப் வாயிலாக ஏறெடுத்த ஜெபத்தில் நடைபெற்ற அற்புதங்கள்

## ஜீவன் திரும்ப வந்தது!



என் உறவினருடைய பிள்ளைக்கு கொரானா நோய் தொற்று ஏற்பட்டு 3 மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். 3 இடத்திலும் இனி ஒன்றும் செய்ய முடியாது என சொல்லி கைவிட்டு விட்டனர். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு வாட்ஸ் அப் வாயிலாக செய்தி அனுப்பி ஜெபிக்கச் சொன்னோம். சகோதரர் ஜெபித்துவிட்டு **தைரியமாக இருங்கள் பயப்படும்படி ஒன்றும் ஆகாது கர்த்தர் பிள்ளைக்கு திரும்ப ஜீவனை கொடுப்பார்** என பதில் அனுப்பியிருந்தார்கள். கர்த்தர் அந்த வாக்கின்படியே பிள்ளைக்கு ஜீவனையும் நல்ல சுகத்தையும் கொடுத்தார். கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

நான்கு வருடங்களுக்கு முன்பு என் வயிற்றில் பலவித பிரச்சனைகள் ஏற்பட்டு வயிற்றுப்போக்கினால் அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். குடலில் பல வித டெஸ்டுகளை எடுத்தனர். Ulcerative Colitis என சொல்லி விட்டனர். உடனே என் மகள் **அன்பரின் ஊழியத்திற்கு வாட்ஸ் அப் வாயிலாக செய்தி அனுப்பி ஜெபிக்கும்படி சொன்னாள். சகோதரர் ஜெபித்து பதில் அனுப்பினார்கள். கர்த்தர் இரங்கி எனக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார். அந்த பிரச்சனை முற்றிலும் நீங்கியது.**

**- திருமதி. அமிர்தாபாய், நெய்யாற்றங்கரை.**

# பங்காளர்களுக்கான தனிஜெபத்தின் மூலம் நடைபெற்ற அற்புதங்கள்!

## கர்த்தர் தாம் சொன்னதை நிறைவேற்றினார்!



எனக்கு திருமணம் ஆகி பல வருடங்களாக குழந்தை இல்லை. அதன்பின் நான் கருவுற்றேன். அதுவும் அபார்ஷன் ஆகிவிட்டது. அதனால் அதிக மனவருத்தத்தில் இருந்தோம். 2017-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற பங்காளர்களுக்கான தனிஜெபத்திற்கு நானும் என் அம்மாவும் வந்திருந்தோம். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன்.

**சகோதரர் ஜெபித்துவிட்டு உனக்கு ஆண், பெண் என இரண்டு குழந்தைகளை கர்த்தர் தருவார் என சொல்லி அனுப்பினார்கள். சகோதரர் சொன்ன வார்த்தையின்படியே 2017-ம் ஆண்டு எனக்கு பெண் குழந்தை பிறந்தது. 2019-ம் ஆண்டு ஆண் குழந்தை பிறந்தது. 2019-ல் கொரோனா நேரத்தில் பிரசவம் ஆனபொழுது அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். கர்த்தர் அற்புதமாய் பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. வினிதா, பள்ளியாடிப்பட்டி.**

**அன்பு பங்காளர்களே, நீங்களும் அன்பரின் ஊழியத்தில் தொடர்ந்து இணைந்திருங்கள். கர்த்தர் உங்கள் வாழ்விலும் இத்தகைய அதிசயங்களை, அற்புதங்களை செய்வது நிச்சயம். உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம்.**

# நவம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

| | |
|---|---|
| நவம்பர் 1 | என் ஆபத்து நாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். (சங். 18:18) |
| நவம்பர் 2 | எனக்குச் செவி கொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான். (நீதி. 1:33) |
| நவம்பர் 3 | எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம். (1தெச. 3:7) |
| நவம்பர் 4 | ஆபத்துநாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக, யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக. (சங். 20:1) |
| நவம்பர் 5 | எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச்செய்து, நான் நடந்த வழியிலே என்னோடேகூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்றான். (ஆதி. 35:3) |
| நவம்பர் 6 | ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது. (நீதி. 24:10) |
| நவம்பர் 7 | தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்; அவர்கள் இக்கட்டு களுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார். (சங். 107:19) |
| நவம்பர் 8 | ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது. (யோபு 5:19) |
| நவம்பர் 9 | என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன். (சங். 66:14) |
| நவம்பர் 10 | … இக்கட்டுநாளிலே நான் இளைப்பாறுதல் அடைவேன். (ஆப. 3:16) |
| நவம்பர் 11 | என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படி செய்வீர். (சங். 32:7) |
| நவம்பர் 12 | … தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள். (ஓசியா 5:15) |
| நவம்பர் 13 | அவர்கள் ஆபத்துக் காலத்திலே வெட்கப்பட்டுப் போகாதிருந்து, பஞ்ச காலத்திலே திருப்தியடைவார்கள். (சங். 37:19) |
| நவம்பர் 14 | கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்… இக்கட்டுக்காலத்தில் எங்கள் இரட்சிப்புமாயிரும். (ஏசாயா 33:2) |

| | |
|---|---|
| நவம்பர் 15 | இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். (சங். 37:39) |
| நவம்பர் 16 | அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர். (சங். 71:20) |
| நவம்பர் 17 | கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை ; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். (நாகூம் 1:7) |
| நவம்பர் 18 | தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டு களிலிருந்து அவர்களை விடுவித்தார். (சங். 107:6) |
| நவம்பர் 19 | எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர், (2 கொரி. 1:4) |
| நவம்பர் 20 | என் ஆபத்து நாளில் ஆண்டவரைத் தேடினேன். (சங். 77:2) |
| நவம்பர் 21 | ... அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன். (சங். 141:5) |
| நவம்பர் 22 | தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். (சங். 107:28) |
| நவம்பர் 23 | விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான். (நீதி. 22:3) |
| நவம்பர் 24 | தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். (சங். 46:1) |
| நவம்பர் 25 | ... ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். (சங். 91:15) |
| நவம்பர் 26 | நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள். (1 பேதுரு 3:6) |
| நவம்பர் 27 | எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கி றேன். (2 கொரி. 7:4) |
| நவம்பர் 28 | தேவனே, இஸ்ரவேலை அவனுடைய எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி மீட்டுவிடும். (சங். 25:22) |
| நவம்பர் 29 | நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான். (நீதி. 11:8) |
| நவம்பர் 30 | ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். (சங். 50:15) |

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

### தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

இரவு 8.30 முதல் 9.00 வரை

### தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

புதன், வியாழன், வெள்ளி,

இரவு 7.00 முதல் 7.30 வரை

### மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST TV கேரளம்

சனி

இரவு 7.30 முதல் 8.00 வரை

## விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும்**

**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

# S.J.Saves Trust –ன் அறப்பணிகள்

அக்டோபர் மாதம் சேலூர் செல்லப்பபாளையம், மல்லிகாபுரம், ஓலப்பாளையம், சின்ன சோளிபாளையம், குமாரசாமி பாளையம், சாமிநாதபுரம் ஆகிய ஊர்களில் உள்ள மாணவ மாணவியர்களுக்கு பள்ளிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் உடல் நலத்திற்கு தேவையான சத்து மருந்துகள் வழங்கப்பட்டது.



## டியுஷன் சென்டர்

**S.J.Saves Trust** - மூலமாக நடத்தப்படுகிற டியூஷன் சென்டரில் 1 முதல் 12–ம் வகுப்பு வரையுள்ள பிள்ளைகள் படித்து பயன்பெறுகிறார்கள். அவர்களுக்கு தினந்தோறும் இரவு உணவு கொடுத்துவருகிறோம்.

## நன்கு படிக்கிற பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது

நடந்து முடிந்த காலாண்டு தேர்வுகளில் முதல் ரேங்க் எடுத்த மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் Dr.ஆனந்த் ஸ்திரா அவர்கள் சிறப்பு பரிசாக கைக்–கடிகாரத்தை வழங்கினார்கள்.

பரிசு வாங்கிய பிள்ளைகளின் பெயர்கள் 1.கீதா, 2.ஜனனி, 3.பாரதி 4.ஹர்சினி 5.கிஷோர் 6.சௌபர்னிசா.







நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திர–ருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். (மாற்கு 10:21)

இந்த பணிக்கு உற்சாகமாய் தாங்குகிற உங்கள் அனைவரையும் கர்த்தர் தாமே நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

ஒரு பிள்ளைக்கு மாதம் 1000 ரூபாய் செலவு செய்கிறோம்.



## கிறிஸ்துமஸ் அன்பளிப்பு!

உங்களிடமிருந்து ⟶ ஏழைகளுக்கு

ஒரு ஏழை நபர் / குழந்தைக்கு கிறிஸ்துமஸ் அன்பளிப்பாக

புத்தாடை , பரிசு பொருட்கள்

கேக், இனிப்பு வகைகள், அன்பின் விருந்து அளிக்க

ஒரு நபருக்கு Rs.1500/-

உங்கள் பெயரில் இந்த அன்பளிப்பை

உற்சாகமாய் கொடுங்கள்! கொண்டாடுங்கள்!

# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள், அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். (யாத். 23:25)**

**கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார், (உபாகமம் 7 : 15)**

அன்பான தேவ பிள்ளைகளே!

இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க உலகத்திற்கு வந்தார். அத்துடன் சகல நோய்களையும் தம்முடைய வார்த்தையால், வல்லமையுள்ள கரத்தினால், பரிசுத்த ஆவியினால் சுகமாக்குகிறார். **லூக்கா 10:30-37 வரையில் சொல்லப்பட்ட நல்ல சமாரியன் உவமையின் மூலம் தேவனாகிய கர்த்தர் பிணியாளிகளை சொஸ்தமாக்கவே விரும்புகிறார்.**

**சங்கீதம் 103:35 இந்த வேத வசனங்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது தான் S.J.S.T. மருத்துவமனை! இது ஒரு ட்ரஸ்ட் மருத்துவமனையாக இருக்கிறபடியால் நோயாளிகளுக்கு எல்லாமே இலவசமாக கிடைக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் நாங்களோ நோயாளிகளுக்கு கொடுக்கப்படும் மருந்துகளுக்கு, திறமையான மருத்துவர்களுக்கு மற்றும் மருத்துவமனையின் பராமரிப்பு செலவுகளுக்கு எல்லாம் சேர்த்து ஒவ்வொரு மாதமும் பல லட்சங்களை செலவு செய்கிறோம். இந்த மருத்துவ பணிக்காக தினந்தோறும் ஜெபியுங்கள். மனமுவந்து தாங்குங்கள்!**

அன்புள்ளம் கொண்ட அன்பரின் ஊழிய பங்காளர்களாகிய நீங்களும் இந்த ஏழை மக்களை நினைத்து இம்மருத்துவமனைக்கு உதவி செய்யுங்கள். நிச்சயமாய் உங்களது அர்ப்பணிப்பு பரலோக ஞாபக புத்தகத்தில் எழுதப்படும். தொடர்ந்து இந்த மருத்துவமனை வளர்ச்சிக்காக ஜெபியுங்கள். ஏழை, எளிய நோயாளிகளை நினைத்து உதவி செய்வீர்கள் என நாங்கள் நம்புகிறோம்.

- **சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான், தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.**
- **கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார், பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான், அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.**
- **படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார், அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்**
  **- சங்கீதம் 41 : 1 3**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

HIRING NOW

# WANTED FOR SJ RURAL HOSPITAL



- Doctors - MBBS / MD
- Nurses Qualification : GNM (3 Years)
- X-Ray Technician, B.Sc.,
- Pharmacist,
  (B.Pharm., or D.Pharm.,)

Apply to : info@mojindia.org | Service Minded, Mission Oriented, Christians Preferred

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

# திருச்சியில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

**இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்**
**10வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 18.**

**நவம்பர் 25 சனிக்கிழமை**

**நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை**

**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

**தொடர்புக்கு : செல் 94888 45627 & 80987 42638**

# உலகச் செய்திகள்



❖ ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலில் ஆயிரத்து நானூறு பேர் பலியாகியுள்ளனர். இருதரப்பிலும் பலியானோர் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

❖ வான்வழித் தாக்குதல் நடத்தி காஸா பகுதியில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தி வரும் இஸ்ரேல், தரைவழித் தாக்குதலுக்கு தயாராகி வருகிறது. இந்த தரைவழித் தாக்குதல் இஸ்ரேலுக்கு கடினமானது என ஒரு சிலர் எச்சரித்து வருகின்றனர்.

❖ இஸ்ரேல் ராணுவ ஊடகத் தொடர்பாளர் ரிச்சர்டு ஹெக்ட் கூறுகையில், "தரைவழித் தாக்குதலுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. அரசு உத்தரவிட்டதும் காஸா எல்லைக்குள் நுழைவோம்" என்றார்.

❖ 2014ம் ஆண்டு இஸ்ரேல் ராணுவம் காஸா எல்லைக்குள் புகுந்து தாக்கியது. அதே நிலைமை இப்போது ஏற்பட்டால், பாலஸ்தீனியர் பலி எண்ணிக்கை பல ஆயிரமாக உயரும்.

❖ ராணுவப் பணிக்காக பதிவு செய்திருந்த 3.6 லட்சம் பேர் போர் புரிய வந்துள்ளனர். இவர்கள் காஸா எல்லையிலும், லெபனான் எல்லையிலும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

❖ பிரதமர் நெதன்யாகு மற்றும் எதிர்க்கட்சி தலைவர் இணைந்த "அவசரகால அரசு" அமைக்கப் பட்டுள்ளது. டிவியில் உரையாற்றிய பிரதமர் நெதன்யாகு, "ஹமாஸ் தீவிரவாதிகளை நசுக்கி அழிப்போம். ஹமாஸ் தீவிரவாதிகள் ஒவ்வொருவரும் இனி இறந்த மனிதர்கள் தான்" என்று சூளுரைத்துள்ளார். ஹமாஸ் நிர்வாகிகள், அமைச்சர்கள் வீடுகளை குறி வைத்து தாக்கி வரும் இஸ்ரேல், அரசியல் தலைவர்கள் வீடுகளையும் விட்டு வைக்கமாட்டோம் என்று கூறியுள்ளது,

❖ காஸாவில் உள்ள மின் உற்பத்தி நிலையம் மின் உற்பத்தியை நிறுத்தியதால் காஸா மக்கள் அக்டோபர் 11ம் தேதி இருளில் இருந்தனர். மிக அரிதாக சில இடங்களில் ஜெனரேட்டர் மூலம் விளக்குகள் எரிந்தன. மின்சாரம் இல்லாமல் மருத்துவமனைகளில் ஆப்ரேஷன், டயாலிசஸ் போன்ற அத்தியாவசிய சேவைகள் நிறுத்தப்பட்டன. உணவுக்காக மளிகைக்கடை, பேக்கரிகளைத் தேடி மக்கள் அலைந்தனர்.

❖ டெல் அவிவ் விமான நிலையத்தில் இருந்து 12ம் தேதி இந்தியாவுக்கு முதல் விமானம் புறப்பட்டது. இந்தியா திரும்ப விருப்பம் தெரிவித்து பதிவு செய்தவர்களில், முதல் தொகுப்பாக 230 பேர் அழைத்து வரப்படுகின்றனர். அவர்களிடம் எந்த வித கட்டணமும் வசூலிக்கப்படாது என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்!



## கடுமையான தலைவலி நீங்கியது!
## ஆப்ரேஷன் இன்றி அற்புதசுகம் கிடைத்தது!

என் பெயர் சரோஜா மேரி. எனக்கு கடந்த ஐந்து வருடங்களாக கடுமையான தலைவலி இருந்தது. வாரத்திற்கு ஒரு முறை என தலைவலி வந்துவிடும். அந்த தலைவலி வந்தால் தொடர்ந்து 2 அல்லது 3 நாட்கள் வரை அதிக கஷ்டப்படுவேன். செப்டம்பர் மாதம் திருச்சியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் **Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் நோயினால் கஷ்டப்படுகிறவர்களை நோக்கி, உங்கள் சரீரத்தில் பாதிப்பு உள்ள இடத்தில் உங்கள் கைகளை வைத்து ஜெபியுங்கள் என சொல்லி நோயாளிகளுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள்.** நானும் என் தலை மீது கை வைத்து ஜெபித்தேன். வாரம் ஒருமுறை வருகிற அந்த தலைவலி இந்த ஒரு மாத காலமாக வரவில்லை. எனக்கு இரங்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.



கடந்த ஜூன் மாதம் என் கணவருடைய தம்பிக்கு திடீரென வலிப்பு வியாதி வந்தது. மருத்துவமனைக்கு அழைத்து சென்ற பொழுது பரிசோதித்த மருத்துவர்கள் மூளையைச் சுற்றி ஒருவித பாதிப்பு இருக்கிறது. உடனே ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என சொன்னார்கள். அதனால் குடும்பத்தினர் அனைவரும் பயத்துடன் இருந்தோம். மீண்டும் இன்னொரு மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை மேற்கொண்டோம். அங்கும் பரிசோதித்து விட்டு ஒரு வாரத்திற்குள் ஆப்ரேஷன் செய்யவேண்டும் எனவும் அதற்கு இலட்சக்கணக்கில் செலவாகும் எனவும் சொல்லிவிட்டார்கள்.




அன்பரின் ஊழிய ஜூன் மாத பத்திரிக்கையில் **பதில் தரும் கர்த்தர் என்ற தலைப்பில் பாஸ்டர் அவர்கள் நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை**

ஆண்டவர் சுகமாக்கிய செய்தியை விரிவாக எழுதியிருந்தார்கள். (இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். மத்தேயு8:13) அந்த சத்தியத்தை நான் விசுவாசித்து அந்த வசனத்தை வைத்து என் கணவருடைய தம்பிக்காக ஜெபித்தேன். அந்த மாத பத்திரிக்கையையும் அவர்களிடம் கொடுத்து வந்தேன். இதுவரை எந்த ஆப்ரேஷனும் பண்ணவில்லை. மாத்திரைகளும் உட்கொள்ளவில்லை. வலிப்பு நோயும் வரவில்லை. நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள். அற்புத சுகம் கொடுத்த கர்த்தரை துதிக்கிறேன். - திருமதி. சரோஜா மேரி, திருச்சி.

## அற்புத சுகம் பெற்றேன்!



என் பெயர் தங்கபாய். எனக்கு மூச்சு விடுவதில் அதிக சிரமம் இருந்தது மற்றும் கால்வலி இருந்தது. இந்த பெலவீனத்துடன் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்தேன். ஜெப வேளையில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் வியாதியினால் கஷ்டப்படுகிறவர்களுக்காக விசேஷித்த ஜெபத்தை ஏறெடுத்தார்கள். நானும் விசுவாசத்துடன் ஜெபித்தேன். இப்பொழுது நன்றாக மூச்சுவிட முடிகிறது, கால்வலியும் மறைந்து போனது. வயதான எனக்கு இரங்கி அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். - திருமதி. தங்கபாய், நாகர்கோவில்.

## பல மாதங்களாக இருந்த புண் குணமாகியது!



என் பெயர் ஜெயந்திரா. கடந்த 9 மாதங்களாக என் காலில் பெரிய புண் ஏற்பட்டு நடக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். மேமாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு என் தம்பி உதவியோடு, காலில் பெரிய கட்டுகளை போட்டுக் கொண்டு தான் கூட்டத்திற்கு வந்தேன். அன்று ஜெப வேளையில், ஆண்டவரே, அடுத்த கூட்டத்திற்கு நான் வரும்பொழுது நல்ல சுகத்துடன் வரவேண்டும் என ஜெபித்து சென்றேன். அதேப்போல அக்டோபர் மாதம் 2-ம் தேதி நாகர்கோவிலில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு புண் முற்றிலும் குணமான நிலையில் காலில் கட்டும் இல்லாமல், யாருடைய உதவியும் இல்லாமல் நானே தனியாக வருவதற்கு கர்த்தர் உதவி செய்துள்ளார்.

என் மகன் 12-ம் வகுப்பு தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெறவும் கர்த்தர் தயை செய்துள்ளார். அதற்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். - திருமதி. ஜெயேந்திரா, கன்னியாகுமரி.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

# Deliverance & Healing Meetings

Dates: November 10th 6 pm (Friday)
November 11th - 9 am & 6 pm (Saturday)
November 12th 9 am (Sunday)

Place: The Last Days Ministers Church
Pastapur X-Roads, Zaheerabad.



Speakers: Rev. Dr. A. Joshua
Dr. Jane Joshua
Bro. Jonathan Moses Raj Stira

For contact:
99898 27090, 99445 36343

(Special Note: Nov.11th 9 am- Women & Youth Special Meetings)

நாகர்கோவிலில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

இடம்
விஜயதா திருமண மண்டபம்,
WCC ரோடு, நாகர்கோவில்.

நவம்பர்
11 சனிக் கிழமை

நேரம்
காலை 9.30 மணி
முதல் 2.00 மணி
வரை

தேவசெய்தி

Dr. ஆனந்த ஸ்திரா



தொடர்புக்கு : 94888 45627,
80987 425638

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,